கர்த்தராகிய இயேசுகிறிஸ்து சீக்கிரமாக பூமிக்கு வரப்போகிறார். இதை 2000 வருடத்திற்கு முன்பு இவ்வுலகில் அவர் வாழ்ந்த காலங்களில் வாக்குப்பண்ணி இருக்கிறார் (யோ 14 :1-3). உண்மையில், அவர் திரும்பி வருவாரென்று நாம் எப்படி அதை உறுதியாக நம்புவது என்று நீங்கள் நினைக்கலாம். கர்த்தராகிய இயேசு மீண்டும் வரும்போது என்னென்ன சம்பவங்கள் நடக்கும் என்று சொல்லிய தீர்க்கதரிசனங்களை வாசித்துப் பாருங்கள். அந்த வசனங்களையும் இப்பொழுது இந்த உலகத்தில் நடந்து வருகின்ற சம்பவங்களையும் ஒத்துப் பார்ப்பீர்களானால், நாம் வாழும் நாட்களிலேயே கர்த்தராகிய இயேசு உண்மையாகத் திரும்ப வருவார் என்பது நிரூபணமாகிறது.

### 1 தேவாலயம் இடிக்கப்படுதல்

இயேசு தேவாலயத்தை விட்டுப் புறப்பட்டுப் போன பிறகு, அவருடைய சீஷர்களில் ஒருவன் தேவ ஆலயத்தின் கட்டடங்களை அவருக்குக் காண்பித்தான். பின்பு அவன் அவரிடத்தில் வந்து போதகரே, இந்த கட்டிடம் எப்படி சிறந்த கற்களினாலும், காணிக்கைகளினாலும் அலங்கரிக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னான். இயேசு அவர்களிடம், நீங்கள் பார்க்கிற இந்த பெரிய கட்டிடங்கள் ஒரு கல்லின் மேல் ஒரு கல்லிராதபடிக்கு எல்லாம் இடிக்கப்படும் நாட்கள் வரும் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார் (மத் 24: 1-2; மாற் 13: 1-2; லூக் 21:5-6). **கி. பி. 70ம் ஆண்டில் இவை பிரத்தியட்சமாக நிறைவேறியது.**

### 2 வருகையின் அடையாளங்கள்

அந்த தேவாலயத்திற்கு எதிராக ஒலிவமலையின்மேல் அவர் உட்கார்ந்திருக்கையில், சீஷர்கள் பேதுருவும், யாக்கோபும், யோவானும், அந்திரேயாவும் அவரிடத்தில் தனித்து வந்து: போதகரே, இவைகள் எப்பொழுது சம்பவிக்கும்? உம்முடைய வருகைக்கும், உலகத்தின் முடிவுக்கும் இவைகள் எல்லாம் நிறைவேறும் காலத்திற்கும் அடையாளம் என்ன? எங்களுக்கு சொல்ல வேண்டும் என்றார்கள் (மத் 24:3; மாற்13:3-4; லூக்21:7).

### 3 வஞ்சிப்பவர்கள் எழும்புவார்கள்

இயேசு அவர்களுக்கு பிரதியுத்தரமாக, ஒருவனும் உங்களை வஞ்சியாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்; ஏனெனில், அநேகர் வந்து என் நாமத்தைச் சொல்லி, நான் தான் கிறிஸ்து என்றும், காலம் சமீபித்திருக்கிறது என்றும் சொல்லி அநேகரை வஞ்சிப்பார்கள். ஆகவே அவர்கள் பின்னாக போகாதீர்கள் என்று சொன்னார் (மத் 24: 4-5; மாற் 13: 5 -6; லூக் 21:8).

### 4 யுத்தங்களும் யுத்தங்களைப்பற்றிய வதந்திகளும்

யுத்தங்களையும் யுத்தங்களின் செய்திகளையும் வதந்திகளையும் கேள்விப்படும் பொழுது கலங்காதீர்கள் பயப்படாதிருங்கள், இவைகள் முன்னதாகச் சம்பவிக்கவேண்டியதே, ஆனாலும் முடிவு உடனே வராது (மத் 24: 6; மாற் 13: 7; லூக் 21:9).

### 5 இனப்போர்கள்|பூகம்பங்கள்|பஞ்சங்கள்| நோய்கள்

பின்பு அவர் அவர்களை நோக்கி ஜனத்துக்கு விரோதமாய் ஜனமும், ராஜ்யத்துக்கு விரோதமாய் ராஜ்யமும் எழும்பும்; பல இடங்களில் மகா பூமியதிர்ச்சிகளும், பஞ்சங்களும், கொள்ளை நோய்களும் உண்டாகும். வானத்திலிருந்து பயங்கரமான தோற்றங்களும் பெரிய அடையாளங்களும் உண்டாகும் (மத் 24: 7; மாற் 13: 8; லூக் 21:10-11).

**6** இவைகளெல்லாம் வேதனைகளுக்கு ஆரம்பம் (மத் 24: 8; மாற் 13: 8).

### 7 கிறிஸ்தவர்களுக்கான கொடுமைகள்

ஆனாலும் எச்சரிக்கையாயிருங்கள், இவைகள் எல்லாம் நடப்பதற்கு முன்னே அவர்கள் உங்கள் மேல் கைபோட்டு உங்களை துன்புறுத்துவார்கள், உங்களை ஆலோசனை சங்கங்களுக்கு ஒப்புக்கொடுப்பார்கள். நீங்கள் ஜெப ஆலயங்களில் அடிக்கப்படுவீர்கள்; சிறைச்சாலையிலும் போடப்படுவீர்கள், உங்களை உபத்திரவங்களுக்கு ஒப்புக்கொடுத்து கொலை செய்வார்கள். என் நாமத்தின் நிமித்தம் தேசாதிபதிகளுக்கும், ராஜாக்களுக்கும் முன்பாக நிறுத்தப்படுவீர்கள். ஆனாலும் அது உங்களுக்கு சாட்சியாவதற்கு ஏதுவாயிருக்கும் (மத் 24: 9; மாற் 13: 9; லூக் 21:12-13).

**8** அவர்கள் உங்களைக் கொண்டு போய் ஒப்புக்கொடுக்கும்போது, நீங்கள் என்ன உத்தரவு சொல்ல வேண்டும் என்று கவலைப்படாதிருக்கும்படி உங்கள் மனதிலே நிர்ணயம் பண்ணிக்கொள்ளுங்கள். அந்நாழிகையிலே உங்களுக்கு எது அருள் செய்யப்படுமோ அதையே பேசுங்கள்; ஏனெனில் பேசுகிறவர்கள் நீங்களல்ல, பரிசுத்த ஆவியே பேசுகிறவர். ஆகையால் உங்களை விரோதிக்கிறவர்கள் ஒருவரும் எதிர்ப்பேசவும், எதிர்நிற்கவும் கூடாத வாக்கையும், ஞானத்தையும் நான் உங்களுக்குக் கொடுப்பேன் (மாற் 13: 11; லூக் 21:14-15).

### 9 குடும்பங்களில் காட்டிக் கொடுத்தல்

அதற்குப்பிறகு அநேகர் இடறலடைவார்கள். அப்பொழுது சகோதரன் சகோதரனையும், தகப்பன் தன் பிள்ளையையும் மரணத்துக்கு ஏதுவாக காட்டிக்கொடுப்பார்கள். சிநேகிதராலும், பந்துஜனங்களாலும் காட்டிக்கொடுக்கப்படுவீர்கள். பெற்றோருக்கு விரோதமாக பிள்ளைகள் எழும்பி, அவர்களை கொலை செய்வார்கள். என் நாமத்தினிமித்தம் எல்லோராலும் பகைக்கப்படுவீர்கள். ஆனாலும், உங்கள் தலைமயிரில் ஒன்றாகிலும் அழியாது. உங்கள் பொறுமையினால் உங்கள் ஆத்துமாக்களைக் காத்துக் கொள்ளுங்கள் (மத் 24: 9-10; மாற்13:12-13; லூக்21:16-19).

### 10 அன்பு தணிந்து போதல்

அக்கிரமம் மிகுதியாவதினால் அநேகருடைய அன்பு தணிந்துபோம். முடிவு பரியந்தம் நிலை நிற்பவனே இரட்சிக்கப்படுவான் (மத் 24:12-13).

**11** இராஜ்யத்தினுடைய இந்த சுவிசேஷம் சகல ஜாதிகளுக்கும் முந்தி பிரசங்கிக்கப்படவேண்டும், **அதன் பிறகு** முடிவு வரும் (மத் 24:14; மாற் 13:10).

### 12 எருசலேமில் பாழாக்குகிற அருவருப்பு

ஆனாலும் எருசலேம் சேனைகளால் சூழப்பட்டு இருப்பதை நீங்கள் காணும் போது, அதின் அழிவு சமீபமாயிற்றென்று அறியுங்கள் (லூக் 21:20). மேலும், *பாழாக்குகிற அருவருப்பைக்* குறித்து தானியேல் தீர்க்கதரிசி சொல்லியிருக்கிறாரே (வாசிக்கிறவன் சிந்திக்கக்கடவன்). நீங்கள் அதைப் பரிசுத்தஸ்தலத்தில் நிற்கக் காணும்போது, யூதேயாவில் இருக்கிறவர்கள் மலைகளுக்கு ஓடிப்போகக்கடவர்கள். நாட்டுப்புறங்களில் இருக்கிறவர்கள் நகரத்தில் பிரவேசியாமல் இருக்கக்கடவர்கள். வீட்டின்மேல் இருக்கிறவன் தன் வீட்டிலே எதையாகிலும் எடுப்பதற்கு இறங்காது இருக்கக்கடவன். வயலில் இருக்கிறவன் தன் வஸ்திரங்களை எடுப்பதற்குத் திரும்பாது இருக்கக்கடவன் (மத் 24: 15-18; மாற் 13:14 -16; லூக்17: 31, 21:21). அந்நாட்களிலே கர்ப்பவதிகளுக்கும், பால் கொடுக்கிறவர்களுக்கும் ஐயோ! நீங்கள் ஓடிப்போவது மாரிக்காலத்திலாவது, ஓய்வு நாளிலாவது சம்பவியாதபடிக்கு வேண்டிக் கொள்ளுங்கள் (மத் 24: 19-20; மாற் 13:17-18; லூக் 21:23). பட்டயக்கருக்கினாலே விழுவார்கள் சகல புறஜாதிகளுக்குள்ளும் சிறைப்பட்டுப் போவார்கள்; புறஜாதியாரின் காலம் நிறைவேறும் வரைக்கும் எருசலேம் புறஜாதியாரால் மிதிக்கப்படும் (லூக் 21:24).

### 13 யாக்கோபுக்கு இக்கட்டுக்காலம் (எரே 30: 6-7)

*அந்நாட்களில்* மிகுந்த இடுக்கணும், மிகுந்த கோபாக்கினையும் உண்டாகும். தேவன் உலகத்தைச்சிருஷ்டித்தது முதல் இது வரைக்கும் சம்பவித்திராததும், இனிமேலும் சம்பவியாததுமான உபத்திரவம் அந்நாட்களில் உண்டாயிருக்கும். கர்த்தர் அந்நாட்களைக் குறைத்திராவிட்டால், ஒருவனாகிலும் தப்பிப்போவதில்லை; தாம் தெரிந்து கொள்ளப்பட்டவர்களினிமித்தமோ, அந்த நாட்கள் குறைக்கப்படும் (மத் 24: 21-22; மாற் 13:19-20; லூக் 21:23). ஆனால், எழுதி இருக்கிற யாவும் நிறைவேறும்படி நீதியைச்சரிக்கட்டும் நாட்கள் அவைகளே (லூக் 21:22).

### 14 கள்ளக்கிறிஸ்துக்களும், கள்ளத்தீர்க்கதரிசிகளும்

அப்பொழுது, *இதோ கிறிஸ்து இங்கே இருக்கிறார்,* அதோ அங்கே இருக்கிறார் என்று எவனாகிலும் சொன்னால் நம்பாதேயுங்கள். ஏனெனில், கள்ளக்கிறிஸ்துக்களும், கள்ளத்தீர்க்கதரிசிகளும் எழும்பி, கூடுமானால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்கத்தக்கதாக அடையாளங்களையும், அற்புதங்களையும் செய்வார்கள். ஆனால் எச்சரிக்கையாயிருங்கள். இதோ, எல்லாவற்றையும் முன்னதாக உங்களுக்கு அறிவித்திருக்கிறேன் (மத் 24:23-24; மாற் 13:21-23). ஆகையால்: *அதோ, வனாந்திரத்தில் இருக்கிறார்* என்று சொல்வார்களானால், புறப்படாதிருங்கள்; *இதோ, அறை வீட்டிற்குள் இருக்கிறார்* என்று சொல்வார்களானால் நம்பாதேயுங்கள். மின்னல் வானத்தின் ஒரு திசையில் – கிழக்கில் தோன்றி, மறுதிசை – மேற்கு வரைக்கும் பிரகாசிக்கிறது போல, மனுஷகுமாரனுடைய வருகையும் இருக்கும் (மத் 24: 26-27; லூக் 17: 23-24).

### 15 வானத்தில் தோன்றும் அடையாளங்கள்

*அந்நாட்களிலே* அந்த உபத்திரவத்திற்குப் பின்பு, அங்கு அடையாளங்கள் தோன்றும். சூரியன் அந்தகாரப்படும், சந்திரன் ஒளியைக் கொடாதிருக்கும், நட்சத்திரங்கள் வானத்திலிருந்து விழும், வானத்திலுள்ள



சத்துவங்களும் அசைக்கப்படும் (மத் 24: 29; மாற் 13:24-25; லூக் 21:25). பூமியின் மேலுள்ள ஜனங்களுக்குத் தத்தளிப்பும், இடுக்கணும் உண்டாகும். சமுத்திரமும், அலைகளும் முழக்கமாயிருக்கும். பூமியின் மேல் வரும் ஆபத்துகளுக்குப் பயந்து எதிர்பார்த்திருக்கிறதினால் மனுஷருடைய இருதயம் சோர்ந்துபோம் (லூக்21:25-26).

16 அதன் பிறகு **மனுஷகுமாரனுடைய அடையாளம்** வானத்தில் காணப்படும். அப்பொழுது மனுஷகுமாரன் வல்லமையோடும் மிகுந்த மகிமையோடும் வானத்தின் மேகங்கள் மேல் வருகிறதைப் பூமியிலுள்ள சகல கோத்திரத்தாரும் கண்டு புலம்புவார்கள். வலுவாய்த் தொனிக்கும் எக்காள சத்தத்தோடே அவர் தமது தூதர்களை அனுப்புவார்; அவர்கள் அவரால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களை வானத்தின் ஒருமுனை முதற்கொண்டு மறுமுனை மட்டும் நாலு திசைகளிலுமிருந்து கூட்டிச்சேர்ப்பார்கள் (மத்24:30-31; மாற்13:26-27;லூக்21:27).

17 இவைகள் சம்பவிக்கத் தொடங்கும் போது, உங்கள் மீட்பு சமீபமாயிருப்பதால், நீங்கள் நிமிர்ந்து பார்த்து, உங்கள் தலைகளை உயர்த்துங்கள் என்றார் (லூக் 21:28).

18 அன்றியும் அவர்களுக்கு ஒரு உவமையைச் சொன்னார்; அத்தி மரத்தையும், மற்றெல்லா மரங்களையும் பாருங்கள். அதிலே இளங்கிளை தோன்றி, துளிர்விடும்போது, வசந்தகாலம் சமீபமாயிற்று என்று அறிவீர்கள். அப்படியே **இவைகள் சம்பவிக்கிறதை நீங்கள் காணும்போது, தேவனுடைய இராஜ்யம் சமீபமாயும்,** வாசல் அருகேயும் வந்துவிட்டது என்பதை அறிந்து கொள்ளுங்கள் (மத் 24: 32-33; மாற் 13:28-29; லூக் 21:29-31). அந்த நாளையும் அந்த நாழிகையையும் பிதா ஒருவர் தவிர மற்றொருவனும் அறியான், பரலோகத்திலுள்ள தூதர்களும் அறியார்கள், குமாரனும் அறியார் (மத்24:36;மாற்13:32).

19 **நோவாவின் காலம்**

நோவாவின் காலத்தில் எப்படி நடந்ததோ, அப்படியே மனுஷகுமாரன் வரும் காலத்திலும் நடக்கும். எப்படியெனில், ஜலப்பிரளயத்துக்கு முன்னான காலத்திலே நோவா பேழைக்குள் பிரவேசிக்கும் நாள் வரைக்கும் ஜனங்கள் புசித்தும், குடித்தும், பெண் கொண்டும், பெண்கொடுத்தும், ஜலப்பிரளயம் வந்து அனைவரையும் வாரிக்கொண்டு போகுமட்டும் உணராதிருந்தார்கள்; அப்படியே மனுஷகுமாரன் வரும்காலத்திலும் நடக்கும் (மத்24:37-39;லூக்17:26-27).

ஏஞ்சல் டிவியை பாருங்கள்
www.angeltv.org

20 **லோத்தின் காலம்**

லோத்தினுடைய நாட்களில் நடந்தது போலவும் நடக்கும்; ஜனங்கள் புசித்தார்கள், குடித்தார்கள், கொண்டார்கள், விற்றார்கள், நட்டார்கள், கட்டினார்கள். ஆனால் லோத்து சோதோமை விட்டுப்புறப்பட்ட நாளிலே வானத்திலிருந்து அக்கினியும், கந்தகமும் வருஷித்து எல்லாரையும் அழித்துப் போட்டது. மனுஷகுமாரன் வெளிப்படும் நாளிலும் அப்படியே நடக்கும் (லூக்17:28-30).

21 லோத்தின் மனைவியை நினைத்துக் கொள்ளுங்கள். தன் ஜீவனை இரட்சிக்க வகை தேடுகிறவன் அதை இழந்துபோவான்; இழந்துபோகிறவன் அதை உயிர்ப்பித்துக் கொள்ளுவான் (லூக்17:32-33).

22 *அந்த இராத்திரியில்* ஒரே படுக்கையில் படுத்திருக்கிற இரண்டு பேரில் ஒருவன் ஏற்றுக்கொள்ளப்படுவான், மற்றவன் கைவிடப்படுவான். திரிகைதிரிக்கிற இரண்டு ஸ்திரீகளில் ஒருத்தி ஏற்றுக்கொள்ளப்படுவாள், மற்றவள் கைவிடப்படுவாள். வயலில் இருக்கிற இரண்டுபேரில் ஒருவன் ஏற்றுக்கொள்ளப்படுவான், மற்றவன் கைவிடப்படுவான் (மத் 24:40-41; லூக் 17:34-36). அவர்கள் அவருக்குப் பிரதியுத்தரமாக: எங்கே ஆண்டவரே, என்றார்கள். அதற்கு அவர்: பிணம் எங்கேயோ அங்கே கழுகுகள் வந்து கூடும் என்றார் (மத்24:28;லூக்17:37).

23 **விழித்திருந்து ஜெபியுங்கள்**

ஒரு மனுஷன் தன் வீட்டை விட்டு, புறதேசத்துக்குப் பிரயாணம் போகையில், தன் ஊழியக்காரருக்கு அதிகாரங்கொடுத்து, அவனவனுக்கு தன்தன் வேலையையும் நியமித்து, விழித்திருக்கும்படிக்குக் காவல் காக்கிறவனுக்குக் கட்டளையிடுவான். அப்படியே நீங்களும் விழித்திருங்கள்; ஏனெனில், தேவனாகிய – வீட்டெஜமான் – சாயங்காலத்திலோ, நடுராத்திரியிலோ, சேவல் கூவும் நேரத்திலோ, காலையிலோ, எப்பொழுது வருவார் என்று நீங்கள் அறியீர்கள், நீங்கள் நினையாத வேளையில் அவர் வந்து, உங்களைத் தூங்குகிறவர்களாகக் கண்டுபிடியாதபடிக்கு விழித்திருங்கள் (மாற் 13:34-36).

24 திருடன் இன்ன ஜாமத்தில் வருவானென்று வீட்டெஜமான் அறிந்திருந்தால், அவன் விழித்திருந்து, தன் வீட்டைக் கன்னமிடவொட்டானென்று அறிவீர்கள். நீங்கள் நினையாத நாழிகையிலே மனுஷகுமாரன் வருவார்; ஆதலால் நீங்களும் ஆயத்தமாயிருங்கள் (மத் 24:43-44).

Local Contact Address

25 உங்கள் இருதயங்கள் பெருந்திண்டினாலும், வெறியினாலும் லௌகீகக் கவலையினாலும் பாரமடையாதபடிக்கும், நீங்கள் நினையாத நேரத்தில் *அந்த நாள்* உங்கள் மேல் வராதபடிக்கும் எச்சரிக்கையாய் இருங்கள். அக்காலத்தை நீங்கள் அறியாதபடியால் எச்சரிக்கையாயிருங்கள். விழிந்திருந்து ஜெபம் பண்ணுங்கள். பூமியில் எங்கும் குடியிருக்கிற அனைவர் மேலும் அது ஒரு கண்ணியைப் போல வரும் (மாற் 13: 33; லூக்21:34-35).

26 நான் உங்களுக்கும் மற்ற எல்லோருக்கும் சொல்வது என்னவென்றால்: இனிச் சம்பவிக்கப்போகிற இவைகளுக்கெல்லாம் நீங்கள் தப்பி, மனுஷகுமாரனுக்கு முன்பாக நிற்கப் பாத்திரவான்களாக எண்ணப்படுவதற்கு, எப்பொழுதும் ஜெபம் பண்ணி விழித்திருங்கள் (லூக்21:36).

27 இவைகளெல்லாம் சம்பவிக்குமுன்னே *இந்தச் சந்ததி* ஒழிந்து போகாதென்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். வானமும் பூமியும் ஒழிந்துபோம், என் வார்த்தைகளோ ஒழிந்து போவதில்லை (மத்24:34-35;மாற்13:30-31;லூக்21:32-33).

**தமது மகிமையான சிங்காசனத்தில் வீற்றிருக்கும் மகா ராஜா - ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மகா வல்லமையுடனும் மகிமையுடனும் தமது பரிசுத்த தூதர்களோடும், பரிசுத்தவான்களோடும் அதி சீக்கிரம் திரும்பி வரப்போகிறார்.**

**தேவனுக்குப்பயந்து, அவரை மகிமைப் படுத்துங்கள்; அவர் நியாயத்தீர்ப்புக் கொடுக்கும் வேளை வந்தது; வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும், நீரூற்றுகளையும் உண்டாக்கினவரையே தொழுது கொள்ளுங்கள்** (வெளி 14: 7)

## இனி காலம் செல்லாது!

**பரலோக இராஜ்யம் சமீபமாயிருக்கிறது மனந்திரும்புங்கள். இந்த சுவிசேஷத்தை விசுவாசியுங்கள்**

**உங்கள் தேவனாகிய கர்த்தரை சந்திக்க ஆயத்தப்படுங்கள்!**



# தேவ இராஜ்ஜியத்தின் சுவிசேஷம்

**தமிழ் | TAMIL**